**செ. வெ. எண்:213** **நாள் 29.03.2021.**

# பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.03.2021) நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல், 2021 தேர்தலை முன்னிட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டன்ற தொகுதிகளில் நடைபெறும் தேர்தல் நடத்தை விதிமீறல்களை கண்காணித்திட 72 பறக்கும்படைக் குழுக்களும், 72 நிலையான கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இக்குழுவினரின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது. அதில் தேர்தல் நாள் மிக நெருங்கி வரும் காரணத்தினால் மேற்படி குழுக்கள் துரிதமாக செயல்படுவது குறித்து குழுவினருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டது. தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி கண்காணிப்பு பணியில் மெத்தனமாக செயல்படும் அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவார்கள், எனவே கண்காணிப்பு பணியினை குழுவினர் முறையாக மேற்க்கொண்டு ஏதேனும் பொருள், பணம் பிடிபட்டால் உடனடியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவித்திடவும் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தெரிவித்திடவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்படுகிறது.

இவ்ஆய்வு கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. தேஷ்முக் சேகர் சஞ்சய் இ.க.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) திருமதி. முத்துமீனாட்சி மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தன.

**செய்தி வெளியீடு :-செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தஞ்சாவூர்.**